**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4933/ஆ5/2023, நாள்.19.12.2023**

.....

பொருள் பள்ளிக் கல்வி – மகாகவி சுப்ரமணிய பாரதியார் பிறந்த நாளை முன்னிட்டு இந்திய மொழிகள் உற்சவம் நடத்துதல் – வழிகாட்டும் நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.69205/எம்/இ2/2023, நாள். 28.11.2023 மற்றும் .12.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 30.11.2023
3. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.69205/எம்/இ2/2023, நாள். .12.2023

•••••

பார்வை 1ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் இந்திய மொழிகள் உற்சவம் சார்ந்த செயல்பாடுகள் 01.12.2023 முதல் 11.12.2023 வரை பள்ளிகளில் நடத்த தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில். பள்ளிகளில் 01.12.2023 முதல் 11.12.2023 வரை நடத்தப்படும் செயல்பாடுகளுக்கான புகைப்பட நகல் (Image copy) மற்றும் **காணொலி பதிவுகளாக (video)** மேற்கொள்ள பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

பார்வை 3–ல் காணும் கடிதத்தில், மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் இந்திய மொழிகள் உற்சவம் சார்ந்த செயல்பாடுகள் 11.12.2023 அன்று முடிவடைவதை குறிக்கும் வகையில், அனைத்து பள்ளிகளும் ஒரு தனித்துவமான பன்மொழித் திருவிழாவாக கொண்டாட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பள்ளிகளில் வருகின்ற ஜனவரி 2024 முதல் வாரத்திற்குள் ஒரு தனித்துவமான பன்மொழித் திருவிழாவாக நடத்தப்பட்டு அதில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் பங்கேற்று இணைப்பு –1ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை நடத்தி, இந்நிகழ்வினை புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் வாயிலாக ஆவணப்படுத்தி பள்ளிகளில் வைத்திட தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் சார்பாக புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் கோரப்படும் போது இவ்வலுவலகம் அனுப்ப வேண்டும் என அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – செயல்பாடுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை–6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம். (தங்கள் ஆளுகையின் கீழ் செயல்படும் பள்ளிகளுக்கு தெரிவித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

## இணைப்பு

1. பள்ளியின் நுழைவாயிலில் ஒரு பெரிய காட்சி பலகை (Banner) வைத்து, அனைத்து பங்கேற்பாளர்களும், தங்கள் பெயர்களை தாய்மொழியில் கையொப்பமிட வேண்டும். இச்செயல்பாடு, 'என் தாய்மொழியில் என் கையொப்பம்' என்ற தலைப்பில் இருக்கும்.
2. தொடக்க விழா
3. நாடகங்கள், வினாடி வினா, புதிர்கள், கதைகள், பாடல்கள், ஆகிய பன்மொழி கலாச்சார நிகழ்வுகளை நடத்துதல்
4. பிற மொழிகளில் பாடல்கள், நடனங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்
5. தன்னிச்சையான பேச்சு போட்டி, பாடல்கள், ஓவியம் வரைதல் நடத்துதல்
6. மொழி விளையாட்டுகள்
7. பிற மொழிகளில் ஊக்கமளிக்கும் திரைப்படங்கள், குறும்படங்கள், வாழ்க்கை வரலாற்று படங்கள திரையிடல்
8. போட்டிகள்
9. பிற மாநிலங்களின் உணவு கண்காட்சி
10. இந்திய மொழிகளின் கண்காட்சி
11. கருத்தரங்கு, பயிலரங்கம், விவாதம் செயல்பாடுகள்
12. புத்தக ஆசிரியர்கள் மற்றும் இலக்கியவாதிகளுடன் உரையாடுதல்
13. மொழிபெயர்ப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான முதல் அனுபவத்தை வழங்குதல்
14. தெரு நாடகங்கள், ஊர்வலங்கள், நாட்டுப்புற நிகழ்ச்சிகள்